ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

**திருவரங்கத்தில் ஆண்டின் பல நாட்களிலும் ஏதாவது ஒரு விழா நடைபெற்றுக்கொண்டே இருக்கும். ஆழ்வார் ஆசார்யர்கள் திருநக்ஷத்திர உத்ஸவங்களும், பூலோகவைகுண்டமாகிய திருவரங்கத்தில் பெரும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் நிகழ்ச்சிகளையே பார்த்து ரசிக்கும் நமக்கு அந்தந்த விழாக்களின் பின்புலத்தையும், அவை வெளிப்படுத்தும் தத்துவங்களையும் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பில்லை. இவையெல்லாம் பெரியவர்கள் காலத்திலிருந்து இப்படித்தான் நடைபெற்றுவருகின்றன என்பதுபொதுவான பதில். இந்தப் பதிலால் நமக்கு எந்தத்தெளிவும் ஏற்படுவதில்லை.**

1. திருவரங்கனுக்கு ஸமர்ப்பிக்கப்படுகின்ற திருவாராதன காலங்களை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்கள்?
2. பொங்கல் தளிகையில் நம்பெருமாளுக்கு என்ன என்ன அமுதுபடிகள் ஸமர்ப்பிக்கப்படுகின்றன?
3. பெரிய அவசரம் என்றால் எதைக்குறிக்கும்?
4. பஞ்சாங்க ச்ரவணம் எங்கே நடைபெறவேண்டும்? இதற்கு விதிவிலக்காக எங்கே எந்தெந்த நாட்களில் பஞ்சாங்க ச்ரவணம் நடைபெறுகிறது?
5. திருமடைப்பள்ளி ஹோமம் எந்தெந்தக் காலங்களில் நடைபெறும்?
6. நம்பெருமாள் திருநக்ஷத்திரம் ரோஹிணியாயிருக்க ரேவதியில் ஏன் புறப்பாடுதிருமஞ்சனம் நடைபெறுகின்றன? பங்குனி ஆறாம்திருநாள் ஆயில்யநக்ஷத்திரத்தன்று உறையூருக்கும், பங்குனி உத்திரத்தன்று ஸ்ரீரங்கநாய்ச்சியார் ஸந்நிதிக்கும் நம்பெருமாள் எழுந்தருளுவது ஏன்? அவ்வாறு எழுந்தருளுவதற்கு முக்கியக் காரணம் என்ன?[இவ்வாறு எழுந்தருளுவது பெரியவர்கள் காலத்திலிருந்து இப்படித்தான் நடைபெற்று வருகிறது என்று சொல்லாமல் அந்தப் பெரியவர்கள் ஏதோ காரணம் பற்றியே இவ்வாறு செய்திருக்கிறார்கள் என்று அறிந்து கொள்வதுதான் தெளிவினை ஏற்படுத்தும். உறையூருக்கு எழுந்தருளுவதை ஐந்தாம் திருநாளிலும் ஸ்ரீரங்க நாய்ச்சியார் ஸந்நிதிக்கு எழுந்தருள்வதை ஹஸ்தத்தன்றும் நம் பூர்வர்கள் நடைமுறையில் கொள்ளவில்லை ஏன்?]
7. நம்பெருமாள் 108 புஷ்பங்களைக்கொண்ட மாலையை எப்போது எதற்காகச் சாற்றிக்கொள்கிறார்? இது எப்போது களையப்படுகிறது?
8. நம்பெருமாள் கர்ப்பக்ருஹத்தை விட்டு வெளிமண்டபங்களில் எழுந்தருளியிருக்கும் போது எந்தெந்தக் ‘காலங்களில்’ திருவாராதனம் நடைபெறும்?
9. எந்த உத்ஸவத்தின்போது நம்பெருமாள் ஆஸ்தானம் எழுந்தருளிய பிறகு திருவாராதனம் நடைபெறும்?
10. கீழ்க்கண்ட உத்ஸாவாதிகளில் அரவணைத் தளிகை எப்போது ஸமர்ப்பிக்கப்படுகிறது?
    **1. பங்குனி உத்திரம், 2,இராப்பத்து சாற்றுமுறை 3.பங்குனி ஆறாம் திருநாள்.**
11. ப்ரஹ்மோத்ஸவங்களில் எவ்வாறு பலிசாதிக்கப்படுகிறது?
12. இந்தத்திருக்கோயிலில் செல்வர் எழுந்தருளி பலி சாதித்தது உண்டா? அவ்வாறாயின் அந்த வழக்கம் ஏன் நின்றுபோயிற்று?
13. பங்குனித்திருமுளைக்கு மட்டும் விஷ்வக்சேனருடன் விபீஷணாழ்வான் எழுந்தருளுவது ஏன்?
14. நகர சோதனை என்றால் என்ன?[*ஸ்ரீரங்கம் திருவீதிகளில் நம்பெருமாள் எழுந்தருளும்போது வீதியை அடைத்து கட்டிடச்சாமான்களைப் பரப்பிப்போடுவது அனைவருக்கும் வருத்தத்தைத் தரும் நிகழ்ச்சியாகும். இதை நாம் தவிர்த்துக்கொள்ளலாமே. அப்பொழுதான் உண்மையான நகர சோதனை இல்லாவிட்டால் அது நரக சோதனையே*]
15. த்வஜாரோஹண உத்ஸவங்களில் நம்பெருமாள் மூன்று தடவை தேரில் எழுந்தருளுகிறார் எந்தெந்த

நாட்களில் அவ்வாறு எழுந்தருளுகிறார்?

16. சித்திரைத்திருநாள் த்வஜாரோஹணத்தன்று அழகியமணவாளன் கிராமம் ஏன் குத்தகைக்கு விடப்படுகிறது?

17. நம் பெருமாள் ஆறாம் உத்ஸவத்தன்று சூடிக்கொடுத்த நாய்ச்சியாரோடு ஏன் மாலை மாற்றிக் கொள்கிறார்?

18. ஸாது ஸ்ரீவைஷ்ணவர்களென்றால் யாரைக்குறிக்கும்? ஏன் அவர்களுக்கு அந்தப்பெயர் வழங்குகிறது?

19. மற்றைய திவ்யதேசங்களில் நாலாயிரத்தையும் ப்ரஹ்மோத்ஸவ காலங்களில் அந்தந்த எம்பெருமான்கள் கேட்டு மகிழ்கிறார்கள்! ஆனால் திருவரங்கத்தில் ப்ரஹ்மோத்ஸவங்களில் நம்பெருமாள் நாலாயிரத்தையும் திருச்செவி சாற்றுவதில்லை ஏன்?

20. அத்யாபகர் என்ற சொல் எந்த வேர்ச்சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது?

21. ஜாலி அலங்காரம் என்றால் என்ன? கொச்சையான ஜாலி என்ற சொல் உபயோகத்தில் இருக்கலாமா?

22. மூன்று ப்ரஹ்மோத்ஸவங்களில் சித்திரைத்திருநாளுக்கு மட்டும் பாமரமக்கள் பெருமளவில் தானியங்களை நடைபாவாடை இட்டு நம்பெருமாளை தரிசிக்க வருவது ஏன்?

23. பூபதித்திருநாளில் நடைபெறும் திருத்தேரில் மட்டும் உபயநாய்ச்சிமார்கள் எழுந்தருளுவது ஏன்?

24. மற்றைய நாட்களில் நம்பெருமாளுடன் எழுந்தருளும் உபயநாய்ச்சிமார்கள் தைத்தேர் அன்று தாயார் ஸந்நிதியில் திருமஞ்சனம் கண்டருளியபிறகு மூடுபல்லக்கில் தனித்தனியாக ஆஸ்தானம் எழுந்தருளுவது ஏன்?

25. மட்டையடி என்றால் என்ன? அன்றைக்கு திருவரங்கத்தில் யாரேனும் மட்டையால் அடிவாங்குகிறார்களா? அவ்வாறு மட்டையால் அடிக்கும் உத்ஸவம் எந்தஊரில் நடைபெறுகிறது?

26. உத்ஸவ காலங்களில் ஏழாம் திருநாளன்று காலைவேளை திருவீதிப்புறப்பாடு ஏன் நடைபெறுவதில்லை?

27. ‘வரம்தரும் பெருமாள் அரையர்’ என்ற திருநாமம் எப்போது யாரால் யாருக்கு சாற்றப்பட்டது?

28. ஸமரபூபாலன், பூபாலராயன், சேரபாண்டியன் ஆகிய பீடங்களில் நம்பெருமாள் வீற்றிருந்து கைங்கர்யம் கொள்ளுகிறார்? எந்தெந்த ஸந்தர்ப்பங்களில் நம்பெருமாள் அந்த பீடங்களில் எழுந்தருளுகிறார்?

29. கோயில் திருவாய்மொழியினை எப்போது எங்கு யார் மூலமாக நம்பெருமாள் திருச்செவிசாற்றி அருளுகிறார்?

30. கைசிகஏகாதசியன்று நம்பெருமாள் நீலமாணிக்கக்கல் மட்டும் சாற்றிக்கொண்டு எழுந்தருளுவது ஏன்?

31. 1.இராப்பத்து சாற்றுமுறை அன்று பன்னீராயிரம் திருப்பணியாரங்கள் 2.ஜ்யேஷ்டாபிஷேகத்திற்கு அடுத்தநாள் பெரியதிருப்பாவாடை 3. கைசிக ஏகாதசியன்று 360 பச்சைவடம் 4. பவித்ரோத்ஸவத்தில் 360 திருவாராதனங்கள் இவையெல்லாம் என்ன என்ன குறைபாடுகளை நிவர்த்தி செய்திட ஸமர்ப்பிக்கப்படுகின்றன?

32. ரக்ஷாபந்தன உத்ஸவங்களில் நம்பெருமாள் படிப்பு கேட்ட பிறகு தீர்த்தம் ஸாதித்து ஆஸ்தானம் எழுந்தருளுவது ஏன் நின்று போயிற்று?

33. ஸப்தாவரணத்தன்று தீருவீதிகளில் வாத்யங்கள் முழங்குவதில்லை. ஏன் இந்த ஏற்பாடு. அன்றைய தினம் உடையவர் ஸந்நிதிக்கு எழுந்தருளியபிறகு ஆர்யபட்டாள் வாசலில் ஸ்ரீ பாதம் தாங்கிகள் திருவடிகளில் தீர்த்தம் சேர்க்கப்படுவது ஏன்?

34. கனுவன்று நம்பெருமாள், உடையவர் ஸந்நிதிக்கு எழுந்தருளியபிறகு ஆர்யபட்டாள் வாசலில் ஸ்ரீபாதம் தாங்கிகள் பாதங்களில் தீர்த்தம் சேர்க்கப்படுவதில்லை ஏன்?

35. யார் யார் ஸ்ரீரங்கம் கோயிலில் ப்ரஹ்ம ரத மரியாதைக்குரியவர்கள்? யார் யார் யானையேற்றம் பெற உரிமையுடையவர்கள்?

36. கார்த்திகைப் பட்டோலையில் என்ன வாசகங்கள் எழுதப்படுகின்றன? இந்த பட்டோலையை யார் யாரிடம் கொண்டு சேர்க்க வேண்டும்?